பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 01 2026 SUNDAY 12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. காங்கிரஸ் கட்சி நாட்டின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தாத காரணத்தால்தான் அக்கட்சியை மக்கள் நிராகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. நாட்டின் பாரம்பரிய கைவினைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், பிரதமரின் விஷ்வகர்மா திட்ட கண்காட்சி புதுதில்லியில் இன்று தொடங்கியது.
3. மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் முறைகேட்டில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள் மீதான நடவடிக்கையை திரும்பப்பெறுமாறு அம்மாநில அரசு விடுத்த கோரிக்கையை தேர்தல் ஆணையம் நிராகரித்துவிட்டது.
4. மகாராஷ்ட்ராவில் நேரிட்ட சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.
5. ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

. . இனி விரிவான செய்திகள் . .

<<<<<>>>>>

காங்கிரஸ் கட்சி நாட்டின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தாத காரணத்தால்தான் அக்கட்சியை மக்கள் நிராகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம் காசிரங்கா தேசிய பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள **35** கிலோமீட்டர் நீள உயர்மட்ட சாலை மற்றும் **Kaliabor — Lumaligarh** இடையேயான தேசிய நெடுஞ்சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றும் பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

காங்கிரஸ் கட்சி எதிர்மறை அரசியலை பின்பற்றுவதால்தான் மகாராஷ்ட்ரா மற்றும் கேரளாவில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் மக்கள் அக்கட்சியை நிராகரித்துவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மாறாக பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, மக்கள் நலனில் அக்கறை செலுத்துவதால் மும்பை மற்றும் திருவனந்தபுரம் மாநகராட்சிகளை கைப்பற்றியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

காசிரங்கா தேசிய பூங்கா, அஸ்ஸாம் மாநிலத்தின் ஆன்மாவாக திகழ்கிறது என்று குறிப்பிட்ட பிரதமர், இந்த பூங்கா நாட்டின் உயிர்ப்பன்மையின் விலைமதிப்பற்ற சொத்தாக திகழ்கிறது என்றும் கூறினார்.

இந்த பூங்கா யுனஸ்கோ அமைப்பின் உலக பாரம்பரிய தலங்கள் பட்டியலில் இடம்பெற்றிருப்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக, குவஹாத்தி, ரோத்தக் மற்றும் திப்ருகர் — லக்னோ இடையிலான இரண்டு அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவைகளை பிரதமர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>

பிரதமரின் விஷ்வகர்மா திட்ட கண்காட்சியை மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு ஜித்தன்ராம் மாஞ்சி புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்தார்.

இந்த கண்காட்சியில் பங்கேற்றுள்ள கைவினைஞர்கள் மற்றும் விற்பனையாளர்களுடனும் அவர் கலந்துரையாடினார்.

கைவினைஞர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தி, சர்வதேச அளவில் பிரபலப்படுத்தும் நோக்கில் இந்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் நாட்டின் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை காட்சிக்கு வைத்துள்ளனர்.

இக்கண்காட்சி இம்மாதம் 31-ஆம் தேதிவரை நடைபெறும்.

<<<<<>>>>>

பஞ்சாப் மாநிலத்தில் சர்வதேச எல்லையையொட்டிய பகுதியில் விளைநிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இம்மாநிலத்தில் பாகிஸ்தானையொட்டிய 532 கிலோமீட்டர் தூர எல்லைப்பகுதியில் தற்போது திட்டமிட்டுள்ள இடத்தில் வேலி அமைத்தால், விவசாயிகள் தங்களது விளைநிலத்திற்குள் செல்ல எல்லை தாண்ட வேண்டிய சூழல் ஏற்படும்.

இதுகுறித்து அம்மாநில முதலமைச்சர் திரு பகவந்த் மான் முறையிட்டதன் பேரில், விவசாயிகள் எல்லை தாண்டி செல்லாத வகையில், வேலி அமைப்பது குறித்து பரிசீலிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளதாக பஞ்சாப் அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>

நாடு முழுவதும் **6** லட்சத்து **60** ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய கூட்டுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள தேசிய கூட்டுறவு தரவு விவரங்களின்படி, பால் உற்பத்தி, மீன்வளம், கைவினைப் பொருள் தயாரிப்பு, விளைப் பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லுதல் உள்ளிட்ட **30**-க்கும் அதிகமான பிரிவுகளில் இந்த சங்கங்கள் செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நபார்டு வங்கி, **IFFCO** உர நிறுவனம் மற்றும் அமுல் பால் தொழிற்சாலை போன்ற தேசிய அளவிலான கூட்டுறவு சங்கங்கள் முதல், தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் வரையிலான கூட்டுறவு அமைப்புகளில் சுமார் **32** கோடி உறுப்பினர்கள் உள்ளதாகவும், மொத்த கூட்டுறவு சங்கங்களில் **98** சதவீதம் கிராமப்புறங்களில் செயல்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை கணினி மயமாக்க **2** ஆயிரத்து தொள்ளாயிரத்து **25** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

இந்தியா மற்றும் ஜப்பான் கடலோர காவல்படைகளுக்கு இடையிலான கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் விதமாக, இருநாட்டு கடலோர காவல்படையினரும் மும்பை கடற்பகுதியில் பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் கப்பல்களில் இருந்து நச்சுப்பொருள் கசிவு ஏற்பட்டால் அதனை உடனடியாக எதிர்கொள்வது குறித்து இந்த ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது.

இந்தோ — பசிபிக் கடற்பகுதியை சுதந்திரமானதாக பாதுகாப்பதை உறுதிபடுத்தும் வகையிலும் ஒத்திகை மேற்கொள்ளப்பட்டதாக கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

இண்டிகோ விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டதற்காக அந்நிறுவனத்திற்கு சிவில் விமான போக்குவரத்து இயக்ககம், **22** கோடியே **20** லட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

கடந்த மாதம் **3**-ஆம் தேதிமுதல், **5**-ஆம் தேதிவரையிலான காலத்தில் இண்டிகோ நிறுவனத்திற்கு சொந்தமான **2** ஆயிரத்து **507** விமானங்கள் ரத்து செய்யப்பட்டதுடன், ஆயிரத்து **852** விமானங்கள்

மிகவும் தாமதமாக இயக்கப்பட்டதால், **3** லட்சத்திற்கும் அதிகமான பயணிகள் அவதிக்குள்ளானதாக அந்த இயக்ககம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழு நடத்திய விரிவான விசாரணையின் அடிப்படையில், இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பின்போது முறைகேட்டில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள் மீதான நடவடிக்கையை திரும்பப்பெறுமாறு அம்மாநில அரசு விடுத்த கோரிக்கையை தேர்தல் ஆணையம் நிராகரித்துவிட்டது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்போது தெற்கு **24** பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள **Baruipur** மற்றும் கிழக்கு **Midnapor** மாவட்டத்துக்கு உட்பட்ட மொய்னா சட்டப்பேரவைத் தொகுதி தேர்தல் அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் அதிகாரிகள் முறைகேடு செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து பணியிடை நீக்கம் செய்யுமாறு மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் பிறப்பித்த உத்தரவை உறுதியாக செயல்படுத்த வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் **Mohol** அருகே நேரிட்ட சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

மும்பை **Panvel** பகுதியில் இருந்து **Akkalcot** நோக்கி சென்று கொண்டிருந்து கார், நள்ளிரவில் சோலாப்பூர் — புனே தேசிய நெடுஞ்சாலையில் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து, சாலையோர மரத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>

மௌனி அமாவாசையை முன்னிட்டு வட மாநிலங்களில் மக்கள் நீர்நிலைகளில் புனித நீராடி தங்களது முன்னோர்களை நினைவு கூர்ந்தனர்.

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் உள்ள திரிவேணி சங்கமம், வாரணாசி மற்றும் உத்தராகண்ட் மாநிலம் ஹரித்துவாரில் மக்கள் கங்கை ஆற்றங்கரையில் புனித நீராடினர்.

தமிழகத்தில் தை அமாவாசையை முன்னிட்டு, ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், ராமேஸ்வரம், கன்னியாகுமரி உள்ளிட்ட இடங்களில் மக்கள் கடற்கரைகள் மற்றும் ஆற்றங்கரைகளில் நீராடி தர்பணம் செய்தனர்.

நாமக்கல் மாவட்டம் மோகனூர் காவிரிக்கரையில் மக்கள் படையலிட்டு முன்னோர்களை நினைவு கூர்ந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — கண்ணன் - 31 Sec.***

<<<<<>>>>>

ஈரானில் மதத்தலைவர் அயத்துல்லா அலி கமேனி தலைமையில் கடந்த 37 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர வேண்டியது அவசியம் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த இதுவே சரியான தருணம் என்று கூறினார்.

அந்நாட்டு மக்கள் ஈரான் அரசுக்கு எதிராக கடந்த சில வாரங்களாக நடத்திவரும் போராட்டத்தை சுட்டிக்காட்டிய திரு டோனல்டு ட்ரம்ப், ஆட்சிப்பொறுப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக ஈரான் அரசு அடக்குமுறையை கையாள்வதாக குற்றம் சாட்டினார்.

<<<<<>>>>>

ஈராக்கின் **Ain Al — Asad** விமானப்படை தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கப்படைகள் முழுமையாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன.

ஐ எஸ் தீவிரவாதிகளை எதிர்கொள்வதற்காக ஈராக்கில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்க கூட்டுப்படைகளை படிப்படியாக விலக்கிக் கொள்வதென, **2024**-ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, இந்த படையினர் திரும்பப் பெறப்பட்டுள்ளனர்.

எனினும், சிரியா மீதான தாக்குதல் காரணமாக அமெரிக்க ஆலோசகர்கள் சிலர் மட்டும் தொடர்ந்து ஈராக்கில தங்கியிருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே. சிரியா மீது அமெரிக்கப்படைகள் நடத்திய விமான தாக்குதலில் அல்கொய்தா இயக்கத்துடன் தொடர்புடைய முக்கிய தீவிரவாதியான பிலால் ஹசன் கொல்லப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

**<<<<<END>>>>>**